விழுப்புரம் மாவட்டம். செஞ்சி வட்டம். செஞ்சி ஊராட்சி ஒன்றியம். சத்தியமங்கலம் கிராமம் மீதமுள்ள சத்தியமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்:

முன்னிலை : ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. **S.L.** அபர்ணா

நாள்: 01-06-2024

பொருள்: உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், சத்தியமங்கலம் கிராமம் - புஞ்சை சர்வே எண்கள்: 486/2, 487/1. 14700 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள இராமமூர்த்தி நகர் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப இறுதி ஒப்புதல் வழங்குதல் குறித்து

பார்வை: 1) மனுதாரர் திருமதி **அன்னபூர்ணி** சத்தியமங்கலம் அவர்களின் விண்ணப்பம். நாள் 18-05-2024

2) நிராகரணை எண் 79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017

3) மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் மாவட்டம். அவர்களின் கடிதம் இணைதள வாயிலாக இணையதள விண்ணப்ப எண்: **ROC No: VFOGE1Y1/2024/TCP** நாள் 24-04-2024 (இணையதள ஒப்புதல்)

4) சார்பதிவாள் பதிவுத்துறை சார்பதிவாளர் அலுவலகம் செஞ்சி தான ஆவண எண்: **686/2024** நாள் **16-04-2024**

5) கூராய்வு கட்டணம் செலுத்து கணக்கு எண்: 7392977908 ரூ.71,000/- நாள்: **29-05-2024** நில பயன் மாற்று கட்டணம் செலுத்து ரசீது எண்: **20240601001161** ரூ.27,000/- நாள்: 01-06-2024

உத்திரவு :

உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம் சத்தியமங்கலம் கிராமம் புஞ்சை சர்வே: 486/2, 487/1 எண்கள் 3.63 செண்ட் அல்லது 14700 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள இராமமூர்த்தி குடியிருப்பு மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 3இல் சுட்டிய கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதலுக்கான கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பார்வை (2) மற்றும் (3) இல் சுட்டியபடி மனைப்பிரிவு சாலை அமைப்பு வரைபடம் இசைவு வழங்கப்பட்டது. பார்வை (4)இல் சுட்டிய படி சாலை, மூலை முடக்கு மற்றும் பொது ஒதுக்கீடுகளை தானபத்திர ஆவண எண்: **686/2024** நாள் 16-04-2024

உள்ளாட்சியிடம் தானமாக ஒப்படைகப்பட்டு தானபத்திரம் அசல் பெறப்பட்டுள்ளது. ஆதனை தொடர்ந்து பார்வை (3)இல் சுட்டிய படி பார்வை (5)இல் கூராய்வு கட்டணம் மனைக்கு ரூ.1000/- வீதம் 71

Scanned with OKEN Scanner

மனைகளுக்கு ரூ.71,000/- நில பயன் மாற்று கட்டணமாக நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பில் 27000 உத்தேச மனைப்பிரிவுக்குண்டான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

மனைப்பிரிவுக்கு இணைப்பிலுள்ள, மனைப்பிரிவு நபந்தனைகளின்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது. இணையதளம் வாயிலாக ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு மேற்படி சத்தியமங்கலம் ஊராட்சி மன்ற தீர்மான எண். **5/2024** என எண்ணிடப்பட்டு அசல் வரைபடங்கள் மற்றும் ஒப்புதல் ஆணை இத்துடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

உள்ளாட்சி இறுதி ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்மந்தப்பட்ட நகர் ஊரமைப்பு மற்றும் பத்திரபதிவு அலுவலகத்திற்கும் நில அளவை துறைக்கும், தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு:
வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

S.L.Apar

தலைவர்
சத்தியமங்கலம் ஊராட்சி
செஞ்சி ஒன்றியம்

திருமதி. S.L. அபர்ணா
ஊராட்சி மன்ற தலைவர்
சத்தியமங்கலம் கிராமம்
செஞ்சி ஊராட்சி ஒன்றியம்
செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்,
604153.

பெறுதல் :
திருமதி. அன்னபூரணி
பெருமாள் கோவில் தெரு,
சத்தியமங்கலம்
செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்,
604153.

Scanned with OKEN Scanner